# வறட்சியால் காய்ந்த கரும்புப் பயிர்கள்: நிவாரணம் வழங்க விவசாயிகள் வலியுறுத்தல்



தருமபுரியில் நடைபெற்ற விவசாயிகள் குறைகேட்புக் கூட்டத்தில் பேசிய ஆட்சியர் வே. சரவணன்.

**தருமபுரி, ஆக. 21:** வறட்சியால் கருகிய கரும்புப் பயிர்களை கணக்கெடுத்து, உரிய நிவாரணம் வழங்க வேண்டும் என விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

தருமபுரி மாவட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர் கூட்டம் ஆட்சியர் அலுவலக அதியன் கூட்டரங்கில் மாவட்ட ஆட்சியர் வே. சரவணன் தலைமையில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

கூட்டத்தில், தருமபுரி மாவட்டத்தில் பாலக்கோடு கூட்டுறவு சர்க்கரை ஆலை, பாப்பிரெட்டிப்பட்டி சுப்ரமணிய சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கு வழங்குவதற்காகப் பயிரிடப்பட்ட கரும்புப் பயிர்கள் வறட்சி காரணமாக கருகி வருவதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

**கருகிய கரும்புப் பயிருக்கு நிவாரணம்...**

இதுகுறித்து கணக்கெடுப்பு நடத்துவதாக கூறப்படுகிறது. ஆனால், பெரும்பாலான கரும்புத் தோட்டங்களைப் பார்வையிட யாரும் வரவில்லை. எனவே, வறட்சியால் பாதிக்கப்பட்ட கரும்புப் பயிர்களைப் பார்வையிட்டு, கணக்கெடுப்பு நடத்தி, உரிய நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தி, காய்ந்த கரும்புப் பயிர்களை விவசாயிகள் கூட்டத்தில் பார்வைக்கு வைத்துக் கேள்வி எழுப்பினர். இதையடுத்து, மாவட்டம் முழுவதும் கணக்கெடுப்பு நடத்தப்படும் என அதிகாரிகள் உறுதியளித்தனர்.

அதேபோல, வேர்ப்புழு தாக்குதலாலும் கரும்புப் பயிர்கள் தற்போது பாதிக்கப்பட்டுள்ளன. எனவே, நடவுக்கு முன்பே கரும்பில் வேர்ப்புழு தாக்குதல் ஏற்பட்டால் அதனைத் தடுப்பதற்கான வழிமுறைகள் குறித்தும், நடவுக்குப் பின்னர் ஏற்படும் பாதிப்புகளைத் தடுப்பதற்கான மேலாண்மை முறைகள் மற்றும் ஆலோசனைகளையும் சர்க்கரை ஆலை நிர்வாகம், வேளாண் துறை சார்பில் வழங்க வேண்டும். இல்லையெனில், கரும்புப் பயிர் சாகுபடியைக் கைவிட வேண்டிய நிலை ஏற்படும்.

அதேபோல, தற்போது மாவட்டத்தில் ஓரளவு வளர்ந்த வேர்ப்புழுத் தாக்குதலுக்கு உள்ளான கரும்புகளை வெட்டி, வேறு ஆலைக்கு அரைவைக்கு அனுப்ப ஏற்பாடு செய்ய வேண்டும். வரும் டிசம்பர் மாதம் தருமபுரி மாவட்டத்தில் அரைவைப் பருவம் தொடங்கும்போது, வேறு ஆலைகளிலிருந்து கரும்புகளை அரைவைக்கு கொண்டுவரலாம். இதற்கான பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

**கரும்புக்கு காப்பீடு...**

ஏற்கெனவே பாலக்கோடு சர்க்கரை ஆலையில் அரைவைப் பணியை சரிவர மேற்கொள்ள முடியாத நிலை உள்ளது. நிகழ் அரைவைப் பருவத்துக்கு 90 ஆயிரம் டன் அரைவை செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. ஆனால், தற்போது வறட்சி, வேர்ப்புழுத் தாக்குதல் ஆகியவற்றால் இந்த இலக்கு 40 ஆயிரம் டன்னாகக் குறைக்கப்பட்டுள்ளது. இனி வரும் நாள்களில் மழைப் பொழிவு இல்லையெனில், இந்த இலக்கு மேலும் குறைய வாய்ப்புள்ளது. எனவே, கரும்புப் பயிருக்கு காப்பீடு செய்து, உரிய நிவாரணம் வழங்க வேண்டும் என விவசாயிகள் வலியுறுத்தினர்.

**கால்நடைகளுக்கு காப்பீடு...**

விவசாயிகள் வங்கிகளில் கால்நடைகள் வாங்கப் பெற்ற கடன் மற்றும் பராமரிப்புக் கடன் ஆகியவற்றையும் தள்ளுபடி செய்ய வேண்டும். அதேபோல, கால்நடை மருத்துவம் பயிலாமல் பலர் கால்நடைகளுக்குச் சிகிச்சை அளிக்கும் நிலை உள்ளது. இதைக் கண்டறிந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அனைத்து கால்நடை மருத்துவர்களும் உரிய நேரத்தில் கால்நடை மருத்துவமனை மற்றும் மருந்துகளுக்கு செல்வதை உறுதிப்படுத்த, அவர்களுக்கு பயோ மெட்ரிக் முறையை அமல்படுத்த வேண்டும். மாவட்டத்தில் 35 ஆயிரம் மாடுகள் உள்ள நிலையில், 5,500 மாடுகளுக்கு மட்டுமே காப்பீடு செய்யப்பட்டுள்ளது. எனவே, அனைத்து மாடுகளுக்கும் காப்பீடு செய்ய வேண்டும்.

**பால் கொள்முதல் விலையை உயர்த்த வேண்டும்...**

தற்போது பாலுக்கு உயர்த்தி வழங்கப்பட்ட ரூ. 3 போதுமானதாக இல்லை. பாலின் தரம் ஆகியவற்றைக் காரணமாகக் கூறி, அரசு அறிவித்த தற்போதைய விலையான ரூ. 41 என்பது யாருக்கும் கிடைப்பதில்லை. மாறாக, லிட்டருக்கு ரூ. 32 அல்லது ரூ. 34 என்ற அளவில்தான் கிடைக்கிறது. எனவே, பால் கொள்முதல் விலையை விவசாயிகள் கேட்டதுபோல, பசும்பாலுக்கு ரூ. 50, எருமைப் பாலுக்கு ரூ. 60 வழங்க வேண்டும். இந்த அறிவிப்பை அரசு அறிவிக்காவிட்டால், ஆவினுக்கு பால் வழங்குவதை விவசாயிகள் நிறுத்தும் நிலைக்குத் தள்ளப்படுவர்.

அதேபோல, வறட்சி காரணமாக அனைத்து பயிர்களும் காய்ந்துவிட்டதால், தருமபுரியை வறட்சி பாதித்த மாவட்டமாக அறிவித்து, விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டும்.

**வணிக கட்ட ஏலத்தில் வெளிப்படைத்தன்மை தேவை**

இந்து சமய அறநிலையத்துறைக்குச் சொந்தமான விளைநிலங்கள், வணிகக் கட்டடங்கள் ஏலம் விடுவதில் வெளிப்படைத்தன்மை இல்லை. பல ஆண்டுகளாக ஏற்கெனவே ஏலம் எடுத்தவர்களுக்கே மீண்டும் ஒப்பந்தம் வழங்கப்படுகிறது. எனவே, இந்த நடைமுறையில் வெளிப்படைத்தன்மையை பின்பற்றி, வருவாய்த்துறை அதிகாரிகள் முன்னிலையில் பொது ஏலம் விட வேண்டும்.

அனைத்து ஏரிகளிலும் விவசாயிகள் மண் எடுக்க அனுமதி வழங்க வேண்டும். வீட்டு மனைகளின் வரைபடங்களுக்கு பெறப்படும் தொகையை கிராம சபைக் கூட்டத்தில் பொதுமக்கள் பார்வைக்கு வைக்க வேண்டும் என விவசாயிகள் தரப்பில் வலியுறுத்தப்பட்டது.

மாவட்ட வருவாய் அலுவலர் ஆர். கவிதா, பாப்பிரெட்டிப்பட்டி சர்க்கரை ஆலை மேலாண் அலுவலர் ஆர். பிரியா, வேளாண் இணை இயக்குநர் பழனிசாமி, தமிழக விவசாயிகள் சங்க மாநிலத் தலைவர் எஸ்.ஏ. சின்னசாமி, தமிழ்நாடு விவசாயிகள் சங்க நிர்வாகி பொன் மாரி, ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்டச் செயலாளர் ஜெ. பிரதாபன், விவசாயிகள் சிவலிங்கம், முரளி மற்றும் பல்வேறு விவசாயிகள் சங்கத்தினர் கூட்டத்தில் பங்கேற்றனர்.

## சிலம்பம், சதுரங்கப் போட்டிகளில் செந்தில் பள்ளி மாணவர்கள் சிறப்பிடம்



சிலம்பம், சதுரங்கப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளை பாராட்டிய செந்தில் கல்விக் குழுமத் தலைவர் செந்தில் சி. கந்தசாமி.

**தருமபுரி, ஆக. 21:** தருமபுரியில் நடைபெற்ற மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டியில் சிலம்பம் மற்றும் சதுரங்கப் போட்டிகளில் செந்தில் பள்ளி மாணவர்கள் முதல், இரண்டாம் இடம் பெற்றுள்ளனர்.

தருமபுரியில் பள்ளிகளுக்கு இடையிலான சரக மற்றும் மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகள் கடந்த ஒரு வாரத்துக்கு முன்பு தொடங்கி நடைபெற்று வருகின்றன. இதில் தருமபுரி (நகரம்) செந்தில் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி 8ஆம் வகுப்பு மாணவி ஏ . தக்ஷஜா சிலம்பம் போட்டியில் முதலிடம் மற்றும் 9ஆம் வகுப்பு மாணவர் எஸ். ஹர்சன் சதுரங்கப் போட்டியில் இரண்டாம் இடமும் பெற்று சாதனை படைத்துள்ளனர். இவர்கள் மாநில அளவில் நடைபெறும் போட்டிகளில் விளையாட தேர்வாகியுள்ளனர்.

சாதனை படைத்த மாணவ, மாணவியரை செந்தில் கல்வி குழுமத் தலைவர் செந்தில் சி. கந்தசாமி , துணைத் தலைவர் கே. மணிமேகலை, செயலாளர் கே. தனசேகர் மற்றும் நிர்வாகிகள், ஆசிரியர்கள் பாராட்டினர்.


**PUBLIC NOTICE**

This is to inform to General Public that My Client **Mr. R. Balasubramanian S/o. Mr. Ramalingam**, residing at Door No.66/1, Rushab House Apartment, Kavalbyrasandra, Near Old Bus Stand, Bangalore North, R. T. Nagar, Bangalore, Karnataka - 560 032 have represented that they lost the Original Parent Deed i.e., Regd. Sale Deed Doc. No.4093/1990 Dated 26.09.1990 of SRO Hosur relating to the property situated in Govinda Agraharam Village, Sy.No.68/4, Dry.Ext.Hec.1.62.0, Asst. Rs.4.47 the said land has been divided into house sites and layout has been formed and approved by Member Secretary, HNTDA, Hosur vide its Regularization No. LP/HNTDA vide Regularization No. 900/2018, dated: 09.11.2018, in this Plot No.53, measuring an extent of 1200 Sq. feet of land. In this regard my client who is the Present owner namely **Mr. R. Balasubramanian S/o. Mr. Ramalingam** filed an online complaint in Tamilnadu Police- CCTNS Citizen Portal Website and got an online acknowledgement bearing reference No. OLC9222600048128 Dated 15.08.2026. My client hereby issue notice to the General public that if any person has in an manner right, title, claim and/or interest in respect of the above mentioned Land and found the said misplaced Deed anywhere, he/she may inform me or to my client in writing within 7 days from the date of publication of this notice, failing which my client shall treat a certified True Copy of above said misplaced Deed as original for further transactions/ Alienations. Thereafter no claim will be entertained.

By
**K.Velayudham**., M.Sc., M.L.,
Advocate & Notary Public,
Hosur.
Mobile-94430 93345.

Date: 22.08.2026
Place: Hosur



**பொது அறிவிப்பு**

தமிழ்நாடு மாநிலம், தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிபட்டி வட்டம், பி.மல்லாபுரம்அஞ்சல், பொம்மிடி கிராமம், வினோ பாஜி தெரு கதவு எண்.86/54ல் முகவரியில் வசிக்கும் **1. திரு. சலீம் த/பெ. திரு. சாப்ஜான், 2. திருமதி. ஷாயினா க/பெ. திரு. சலீம்** ஆகிய எமது கட்சிக்காரர்கள் வழங்கியுள்ள தகவலின் பெயரில் நான் வழங்கும் பொது அறிவிப்பு யாதெனில்

மேற்படி எமது கட்சிக்காரர்களுக்கு பாத்தியப்பட்ட பொம்மிடி கிராமம் ச.எண்.53/17, புதிய உட்பிரிவு ச.எண்.53/17A இதில் 868 சதுரடி இதற்கு 80.63 சதுர மீட்டர் நிலம் கொண்ட நிலத்திற்கு ஆவணமாக பதிவு செய்யப்பட்ட தாய் பத்திரம் கிரய ஆவணம் எண் .2505/2008 தேதி. 05.09.2008 பாப்பிரெட்டிபட்டி சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யபட்டதுமான தாய் ஆவணத்தை தொலைத்துவிட்டார். மேற்படி அசல் ஆவணம் தொலைந்துவிட்ட காரணத்தினால் எமது கட்சிக்காரர்கள் **1. திரு. சலீம் த/பெ. திரு. சாப்ஜான், 2. திருமதி. ஷாயினா க/பெ. திரு. சலீம்** தமிழ்நாடு காவல் துறை இணைய புகார் பிரிவில் விவர எண். **OLC5872600050206** வழியாக கடந்த **21.08.2026**–ம் தேதி புகார் அளித்து அதற்கான ஒப்புகையும் பெற்றுள்ளார். எனவே, மேற்படி எமது கட்சிக்காரர்கள் குறிப்பிட்டுள்ள மேற்படி நிலத்திற்கு சம்மந்தப்பட்ட மேற்படி அசல் ஆவணத்தை யாரேனும், எங்கேனும் கண்டெடுத்தால் உடன் எமது கட்சிக்காரருக்கோ அல்லது எனக்கோ இந்த அறிவிப்பு வழங்கப்பட்ட தேதியிலிருந்து ஏழு நாட்களுக்குள் தெரிவிக்க வேண்டும். தவறினால் மேற்படி தொலைந்து விட்ட ஆவணத்தின் உண்மை நகலை எதிர்வரும் சொத்து பரிமாற்றங்கள் உள்ளிட்ட விற்பனை, தானம், அடைமானம் ஆகியவற்றுக்கு அசலாக கருதி பயன்படுத்த உள்ளார் என்பதை அறியவும். அதன்பின் வரும் எந்த கோருரிமையும் ஏற்கப்படமாட்டாது என்பதையும் அறியவும்.

**மு.பெரியசாமி , B.A., B.L.,**
வழக்கறிஞர் தர்மபுரி – **636 701.**
அலைபேசி எண்.**8608632602.**

தேதி : **21.08.2026.**
இடம் : தர்மபுரி



**பொது அறிவிப்பு**

பொதுமக்களுக்கு இதன் மூலம் தெரிவிப்பது என்னவென்றால், எனது கட்சிக்காரரான **திரு.M.V.T.கோபால்** அவர்களின் குமாரர் **திரு.முல்லைவேந்தன் (அல்லது)** அவரால் பரிந்துரைக்கப்படுபவர்கள், கீழே சொத்து விவர அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களை அதன் தற்போதைய உரிமையாளர்களான

1. **திருமதி. R. மஞ்சுளா,** வயது சுமார் 44, க/பெ.ராஜா, முகவரி கதவு எண் 45, பிரகாஷ் நகர் மெயின், தேன்கனிக்கோட்டை ரோடு, ஒசூர் டவுன் மற்றும் தாலுகா, கிருஷ்ணகிரி – **635 109.**
2. **திருமதி. இந்து பிரியா. R,** வயது சுமார் 37, க/பெ.ரவி, முகவரி கதவு எண் 2/307, நளிகபெட்டா அக்ரஹாரம், அச்செட்டிப்பள்ளி அஞ்சல், ஒசூர் தாலுகா, கிருஷ்ணகிரி –**635 110.** ஆகியோரிடமிருந்து கிரயம் பெற (வாங்க) உத்தேசித்துள்ளனர்.

கீழ்கண்ட சொத்து விற்பனை பரிவர்த்தனை குறித்து எவருக்கேனும் ஏதேனும் ஆட்சேபனை, உரிமை, ஈடுபாடு, அல்லது தகராறு இருந்தால், இந்த அறிவிப்பு வெளியான நாளிலிருந்து ஏழு (7) நாட்களுக்குள் அதற்குரிய ஆவண ஆதாரங்களுடன் கீழே கையொப்பமிட்டுள்ளவரை நேரில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். தவறும்பட்சத்தில், மேற்சொன்ன சொத்துக்கள் மீது மூன்றாம் நபர் உரிமைகள் / ஆட்சேபனைகள் / தகராறுகள் எதுவும் இல்லை எனக் கருதி, எனது கட்சிக்காரர் (அல்லது) அவரால் பரிந்துரைக்கப்படுபவர்கள் தற்போதைய உரிமையாளர்களிடம் கிரயப் பரிவர்த்தனையை பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுப்பார்கள். அதன் பிறகு எந்தவிதமான கோரிக்கைகளோ, ஆட்சேபனைகளோ அல்லது தகராறுகளோ ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

**சொத்து விவர அட்டவணை (SCHEDULE OF PROPERTIES)**

கிருஷ்ணகிரி பதிவு மாவட்டம், கெலமங்கலம் சார் பதிவு மாவட்டத்திற்குட்பட்ட, ஒசூர் தாலுகா, **தொரப்பள்ளி அக்ரஹாரம்** கிராமத்தில் அமைந்தவை:

**சர்வே எண். 419/4A,** விஸ்தீரணம் ஹெக்டேர் **0.48.0** (அல்லது) ஏக்கர் **1.18½** சென்ட், தீர்வை ரூ.**1.62** ந.பை. இதில் புதிய உட்பிரிவு சர்வே எண்கள் வருமாறு:

**1) சர்வே எண். 419/10,** விஸ்தீரணம் ஹெக்டேர் **0.06.07** (அல்லது) **6551 சதுர அடி,** தீர்வை ரூ.**0.50** ந.பை.

**தாக்கு – I (BIT–I): 5238.75 சதுர அடி** பரப்பளவு கொண்ட நிலம்.
அளவுகள்:வடக்கில் கிழக்கு–மேற்கு: **55.0** அடி
தெற்கில் கிழக்கு–மேற்கு: **55.0** அடி
கிழக்கில் வடக்கு–தெற்கு **90.5** அடி மேற்கில்
வடக்கு–தெற்கு **100.0** அடி

நான்கு எல்லைகள்:
கிழக்கு : இதே சர்வே எண்ணில் உள்ள நிலம் (அல்லது) தாக்கு–**II**
மேற்கு : சர்வே எண் **419/3**–ல் உள்ள வாரி புறம்போக்கு நிலம் மற்றும் சர்வே எண் **419/9**
வடக்கு : சர்வே எண் **420**–ல் உள்ள நிலம், ஒசூர் – சேலம் நெடுஞ்சாலை
தெற்கு : சர்வே எண் **419/9**–ல் உள்ள நிலம்

**தாக்கு – II (BIT –II): 1312.25 சதுர அடி** பரப்பளவு கொண்ட நிலம்
அளவுகள்: வடக்கில் கிழக்கு–மேற்கு: **145** அடி
தெற்கில் கிழக்கு–மேற்கு: **14.5** அடி
கிழக்கில் வடக்கு–தெற்கு **90.5** அடி
மேற்கில் வடக்கு–தெற்கு **90.5** அடி

நான்கு எல்லைகள்:
கிழக்கு : ஆறுமுகம் என்பவருக்குச் சொந்தமான நிலம்
மேற்கு : இதே சர்வே எண்ணில் உள்ள நிலம் (அல்லது) தாக்கு –**1**
வடக்கு : சர்வே எண் **420**–ல் உள்ள நிலம், ஒசூர் சேலம் நெடுஞ்சாலை
தெற்கு : சர்வே எண் **419/9**–ல் உள்ள நிலம்.

**2) சர்வே எண். 419/9,** விஸ்தீரணம் ஹெக்டேர் **0.09.31** (அல்லது) **ஏக்கர்.0.23 சென்ட்,** தீர்வை ரூ.**1.55** ந.பை.

நான்கு எல்லைகள் :
கிழக்கு :சர்வே எண். **419/4A2B** உள்ள **K.N.**வேங்கடலக்ஷமணன் & **S.**அருள் ஜோதி நிலம்,
மேற்கு: சர்வே எண். **419/4A2A1A**–ல் உள்ள நிலம்,
வடக்கு : வாரி புறம்போக்கு நிலம் மற்றும் சர்வே எண். **419/10**
தெற்கு : சர்வே எண். **419/4B2A**–ல் உள்ள நிலம்.

**விசாரணைகள் / தொடர்புக்கு: 9442438100 (திரு. M.V.T.கோபால்)**

**SAI LAW ASSOCIATES**
Advocates & Legal Consultants
**N.MANJUNATH,** B.A.L., LL.B., Advocate,
#1, Venus Arcade, 1st Floor,
Telephone Exchange Road,
Near Court Campus,Hosur-635109.
Mob No.97904 66837.

இடம் : ஒசூர்,
நாள் : 22.08.2026.


## லாரி ஓட்டுநரிடம் வழிப்பறி; 4 பேர் கைது

**அரூர், ஆக. 21:** அரூர் அருகே லாரி ஓட்டுநரிடம் கத்தியை காட்டி ரூ. 17 ஆயிரம் வழிப்பறி செய்ததாக 4 பேரை போலீஸார் வெள்ளிக்கிழமை கைது செய்தனர்.

தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், கோபால்பட்டிபுதூரைச் சேர்ந்த செல்வராஜ் மகன் ராஜீவ் (35). இவர், வீரப்பநாயக்கன்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திருநாவுக்கரசு என்பவருக்குச் சொந்தமான லாரியின் ஓட்டுநராகப் பணிபுரிந்து வருகிறார்.

இந்த நிலையில் வியாழக்கிழமை இரவு 8 மணியளவில் அனுமந்தீர்த்தம்- பொய்யப்பட்டி சாலையில், மாம்பட்டி அருகே லாரியில் வந்தபோது வண்டியை வழிமறித்த சிலர், ஓட்டுநரிடம் கத்தியை காட்டி மிரட்டி அவரிடமிருந்து ரூ. 17 ஆயிரத்தைப் பறித்துச் சென்றனர். இதுகுறித்து லாரி ஓட்டுநர் ராஜீவ் அளித்த புகாரின்பேரில், அரூரை அடுத்த வேப்பநத்தம் கிராமத்தைச் சேர்ந்த மாதேஸ்வரன் மகன் ஹரிராமன் (19), ஆண்டியப்பன் மகன் ஆகாஷ் (17), பிரகாசம் மகன் பொன்ராகுல் (24), தனசேகரன் மகன் முத்தரசன் (28) ஆகியோரை அரூர் போலீஸார் கைது செய்தனர்.


**PUBLIC NOTICE**

This is to inform to General Public that My Client **Mr. K. Venkatesh S/o. Mr. Krishnappa,** residing at Door No.1/36, Thottagiri, Avalapalli, Hosur - 635 109, Hosur Taluk, Krishnagiri District, Tamil Nadu State has represented that he lost the Original Parent Deed i.e., Regd. Sale Deed Doc. No.10453/2014 dated 28.07.2014 of SRO Hosur relating to the property situated in Avalapalli Village, Sy.No.454/1, Dry.Ext.Hec.0.24.5 and Sy.No.466/3, Dry.Ext.Hec.0.20.5, both survey numbers land have been divided into house sites in which Plot No.64, measuring an extent of 1200 Sq. feet of land. In this regard my client who is the Present owner namely **Mr. K. Venkatesh S/o. Mr. Krishnappa** filed an online complaint in Tamilnadu Police- CCTNS Citizen Portal Website and got an online acknowledgement bearing reference No.OLC9222600048515 dated 17.08.2026. My client hereby issue notice to the General public that if any person has in an manner right, title, claim and/or interest in respect of the above mentioned Land and found the said misplaced Deed anywhere, he/she may inform me or to my client in writing within 7 days from the date of publication of this notice, failing which my client shall treat a certified True Copy of above said misplaced Deed as original for further transactions/ Alienations. Thereafter no claim will be entertained.

By
**K.Velayudham**., M.Sc., M.L.,
Advocate & Notary Public,
Hosur.
Mobile-94430 93345.

Date: 22.08.2026
Place: Hosur



Indian Bank

**பென்னாகரம் கிளை**
**BDO அலுவலகம் அருகில்,**
**பென்னாகரம் – 636810**
**தர்மபுரி – மாவட்டம்,**
**அலைபேசி எண் : 9442247170**

**பிற்சேர்க்கை–IV–A [ விதி 8(6)–க்கான விதிமுறைகளைப் பார்க்கவும்]**
**அசையாச் சொத்துக்கள் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு**

**அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான மின்–ஏல அறிவிப்பு– கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 அதனுடன் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை(அமலாக்கம்) விதிகள் 2002, விதி 8(6)–இன் கீழ்**

இதன் மூலம் பொதுமக்களுக்குப் பரவலாகவும் கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) ஆகியோருக்குக் குறிப்பாகவும் அறிவிப்பது யாதெனில், **திரு. P. தங்கவேல் மற்றும் திருமதி. T. சிவகாமி ( குடியிருப்பு முகவரி: 4/66 நல்லனூர், பிக்கம்பட்டி, பென்னாகரம், தர்மபுரி மாவட்டம், தமிழ்நாடு – 636813) ஆகியோரிடம் இருந்து ஈடு பெற்றுக் கடனளித்த இந்தியன் வங்கி, பென்னாகரம் கிளைக்கு வர வேண்டியுள்ள (20.08.2026 அன்றுள்ளபடி) ரூ. 28,68,940/– (ரூபாய் இருபத்தெட்டு லட்சத்து அறுபத்தெட்டாயிரத்து தொள்ளாயிரத்து நாற்பது மட்டும்)** தொகையைத் திரும்பப் பெறும் பொருட்டு, ஈடு பெற்றுக் கடனளித்த வங்கியிடம் அடமானம்/ அடகு வைக்கப்பட்டுள்ளதும் ஈடு பெற்றுக் கடனளித்த இந்தியன் வங்கி, பென்னாகரம் கிளையின்அதிகாரப்பூர்வ அலுவலரால் நேரடி சுவாதீனம் செய்யப்பட்டுள்ளதுமான கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்தானது "உள்ளது உள்ள இடத்தில்", "உள்ளது உள்ளபடி" மற்றும் "உள்ளது என்னவோ அது" எனும் முறையில் **25.09.2026** நாளன்று விற்பனை செய்யப்பட உள்ளது.

மின் – ஏலம் மூலம் விற்பனைக்கு கொண்டுவர உத்தேசிக்கப்பட்டுள்ள சொத்தின் குறிப்பான விவரங்கள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| சொத்தின் விரிவான விபரம் | சர்வே எண் **53/1D, 2200** சதுர அடி தனிநபர் குடியிருப்பு நிலம் மற்றும் அதிலுள்ள **RCC** கூரையிடப்பட்ட இரண்டு மாடி கட்டிடம் (தரைத்தளம் மற்றும் முதல் தளம்). இதன் எல்லைகள் பின்வருமாறு: கிழக்கு: முருகனின் மீதமுள்ள நிலம், மேற்கு: வேதாண்டியின் நிலம், வடக்கு: முருகனின் மீதமுள்ள நிலம், தெற்கு: தர்மபுரி சாலை. |
| சொத்து மீதான வில்லங்கங்கள் | இந்தியன் வங்கி, பென்னாகரம் கிளையில் இருக்கும் வில்லங்கம் |
| குறைந்தபட்சக் கேட்பு விலை | **ரூ. 63,76,000/– (ரூபாய் அறுபத்து மூன்று லட்சத்து எழுபத்தாறாயிரம் மட்டும்)** |
| டேவணித்தொகை | **ரூ. 6,37,600/– (ரூபாய் ஆறு லட்சத்து முப்பத்தேழாயிரத்து அறுநூறு மட்டும்)** |
| ஏல உயர்வுத் தொகை | **ரூ 50,000/–** |
| மின் –ஏல நாள் மற்றும் நேரம் | **25.09.2026** & **முற்பகல் 11.00 முதல் பிற்பகல் 04.00 வரை** |
| சொத்து அடையாள எண் | **IDIB6820782059** |

இணைய வழி ஏலத்தில் கலந்து கொள்ள எங்கள் மின்–ஏலச் சேவை வழங்குநரான **PSB** அலையன்ஸ் பிரைவேட் லிட்., நிறுவனத்தின் **(https://baanknet.com)** இணையத்தளத்தை அணுகுமாறு ஏலதாரர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள். தொழில்நுட்ப உதவிகளுக்கு அழையுங்கள்: **8291220220** பதிவு செய்து கொண்டது தொடர்பான நிலவரங்கள் மற்றும் டேவணித்தொகை **(EMD)** செலுத்தியது தொடர்பான நிலவரங்களுக்கு மின்னஞ்சல் அனுப்புக: **support.baanknet@psballiance.com**

சொத்து விவரங்களுக்கும் சொத்தின் புகைப்படத்துக்கும் ஏல விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கும் அணுகுக: **https://baanknet.com.** மேலும் இந்த இணையத்தளம் தொடர்பான விவரங்களுக்கு **PSB** அலையன்ஸ் பிரைவேட் லிட்., நிறுவனத்தைத் தொடர்பு கொள்ள வேண்டிய எண்: **8291220220**

சொத்தை **https://baanknet.com.** என்ற இணையத்தில் தேடும்போது மேலே குறிப்பிட்டுள்ள சொத்து அடையாள எண்ணைப் பயன்படுத்துமாறு ஏலதாரர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**நாள் : 20.08.2026**
**இடம் : பென்னாகரம்** அதிகாரப்பூர்வ அலுவலர்

தொடர்பு நபர் : **1. (அதிகாரப்பூர்வ அலுவலர் : திரு. ராம் ஜி : 9442247170)**


## மாணவர்களுக்கு கலைத் திறன் போட்டி

**பென்னாகரம், ஆக. 21:** பென்னாகரத்தை அடுத்த கொட்டாவூர் வட்டார வள மைய பள்ளிகளுக்கான கலைத் திறன் போட்டிகள் வெள்ளிக்கிழமை நடைபெற்றன.

கொட்டாவூர் வட்டார வள மையத்திற்கு உள்பட்ட பள்ளிகளில் 1முதல் 5 ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்கள் இப்போட்டிகளில் பங்கேற்றனர். சின்ன பள்ளத்தூர் பள்ளி தலைமை ஆசிரியர் மா. பழனி தலைமை வகித்தார். ஆசிரியர் பயிற்றுநர் ஜனத்குமார் வரவேற்றார்.

வட்டார வளமைய ஆசிரியர் பயிற்றுநர்கள் செல்வம், ஹேமப்பிரியா, தலைமை ஆசிரியர்கள் பாஸ்கரன், பாபி , கலைச்செல்வி மற்றும் ஆசிரியர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர். தலைமை ஆசிரியர் மாதையன் நன்றி தெரிவித்தார்.

## வனப்பகுதியில் ஆழ்துளைக் கிணறு: விவசாயிக்கு அபராதம்

**அரூர், ஆக. 21:** கோட்டப்பட்டி அருகே வனப்பகுதியில் ஆழ்துளைக் கிணறு அமைக்க முயன்ற விவசாயிக்கு ரூ.1 லட்சம் அபராதம் வெள்ளிக்கிழமை விதிக்கப்பட்டது.

தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், தெத்தேரி பகுதியில் கோட்டப்பட்டி வனச்சரகர் மு. ஆனந்த குமார் தலைமையிலான வனத் துறையினர் ரோந்துப் பணியில் ஈடுபட்டனர். அப்போது, தெத்தேரியில் பன்னீர்செல்வம் (42), தனது விவசாய நிலத்தையொட்டியுள்ள வனப்பகுதியில் ஆழ்துளைக் கிணறு அமைக்கும் பணியில் ஈடுபட்டது தெரியவந்தது. இதையடுத்து, பன்னீர்செல்வத்துக்கு ரூ. 1 லட்சம் அபராதத்தை வனத் துறையினர் விதித்தனர்.

## வரலட்சுமி விரதம்: கோயில்களில் சிறப்பு வழிபாடு



தருமபுரி குமாரசாமிப்பேட்டை ஸ்ரீ அங்காள பரமேஸ்வரி அம்மன் கோயிலில் நடைபெற்ற குத்துவிளக்கு பூஜையில் பங்கேற்றோர்.

**தருமபுரி, ஆக. 21:** வரலட்சுமி விரதத்தையொட்டி, தருமபுரி நகரில் கோட்டை காமாட்சியம்மன் கோயில் உள்பட பல்வேறு கோயில்களில் வெள்ளிக்கிழமை சிறப்பு வழிபாடு நடைபெற்றது.

தருமபுரி கோட்டை மல்லிகார்ஜுனேஸ்வரர் உடனாகிய கல்யாண காமாட்சியம்மன் கோயிலில் பெண் பக்தர்கள் தங்களது வேண்டுதலுக்காக அம்மனுக்கு தாலிக்கயிறு, மஞ்சள், குங்கும், ஆடைகளை வைத்து வழிபட்டு, கோயிலுக்கு வந்த பெண்களுக்கு அவற்றை வழங்கினர்.

இதேபோல தருமபுரி வெளிப்பேட்டை அங்காளம்மன் கோயிலில் நடைபெற்ற சிறப்பு வழிபாட்டில் வரலட்சுமி அலங்காரத்தில் அம்மன் பக்தர்களுக்கு அருள்பாலித்தார். ஏ.ஜெட்டிஅள்ளி காமராஜர் நகரில் உள்ள சமயபுரம் மாரியம்மன் கோயிலில் அபிஷேகம் மற்றும் ஆராதனைகள் நடைபெற்றன.

**குமாரசாமிப்பேட்டை:** தருமபுரி குமாரசாமிப்பேட்டை ஸ்ரீ அங்காள பரமேஸ்வரி அம்மன் கோயிலில் 20 ஆவது ஆண்டு ஸ்ரீ வரலட்சுமி விரதத்தையொட்டி குத்துவிளக்கு பூஜை வெள்ளிக்கிழமை நடைபெற்றது. நிகழ்வையொட்டி மூலவர் ஸ்ரீ ஆதிலட்சுமி அம்மன் சிறப்பு அலங்காரத்திலும், உற்சவர் ஸ்ரீ ராஜயோக ராஜலட்சுமி அம்மன் அலங்காரத்திலும் பக்தர்களுக்கு அருள் பாலித்தனர்.


சென்ட்ரல் பாங்க் ஆஃப் இந்தியா
सेन्ट्रल बैंक ऑफ़ इंडिया
Central Bank of India
CENTRAL TO YOU SINCE 1911
மண்டல அலுவலகம் : 14/15, வெரைட்டி ஹால் ரோடு, கோவை - 641 001

**அடையாள சுவாதீனம் அடிப்படையில்**
**மாபெரும் மின்னணு ஏல அறிவிப்பு**
**(E-Auction Notice)**
**(SARFAESI சட்டம் 2002–ன் கீழ்)**

SARFAESI சட்டம் 2002, மற்றும் அதன் பிரிவு 13 (4) ன் கீழ் அதிகாரம் பெற்ற சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா வங்கி அதிகாரி பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும் சொத்துக்களை கீழ்க்கண்ட தேதிகளில் அடையாள சுவாதீனம் எடுத்திருந்தார், இதனைத்தொடர்ந்து கீழ்க்கண்ட தேதிகளில் மேற்கண்ட சட்டத்தின் பிரிவு 13(2)ன் கீழ் பின்வரும் கடன் கணக்குகளில் கீழ்க்கண்டவாறு விவரிக்கப்பட்டுள்ள வங்கிக்கு வர வேண்டிய கடன் நிலுவைத் தொகைகளை வட்டியுடன் வசூலிக்கும் விதமாக பட்டியலில் கண்டுள்ள சொத்துக்களை விற்பனை செய்யும் உரிமையுடன் கூடிய கேட்பு அறிவிப்பினை அனுப்பியிருந்தார். ஆனால் கடன்தாரர் / உத்தரவாதம் அளித்தவர் / அடமானம் வைத்தவர் கடன் நிலுவைத் தொகைகளை திருப்பிச் செலுத்த தவறியதால், இதன்கீழ் கையொப்பமிட்ட அதிகாரி மேலே குறிப்பிட்ட சட்டத்தின் பிரிவு 13 (4) (a) மற்றும் விதி 8 மற்றும் 9 ன் கீழ், தனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி கீழ்க்கண்ட சொத்துக்களை விற்பனை செய்வதன் மூலம் வங்கிக்கு வர வேண்டிய நிலுவைத் தொகைகளை வசூல் செய்திட உள்ளார். இதன்கீழ் கையொப்பமிட்ட அதிகாரியின் மூலமாக **https://baanknet.com** என்ற இணையதளத்தின் வாயிலாக மின்னணு ஏல முறையில் விற்பனை நடைபெறும்.

**கிளை : ஒசூர் கிளை. கடன் கணக்கின் பெயர் : கடன் பெற்றவர் : திரு.S.S.லட்சுமிபதி, த/பெ.திரு.S.V.ஸ்ரீநிவாசலு,** பிளாட் எண்.2, ஜெயலட்சுமி நிலையம், அம்மன் நகர், தின்னூர், ஒசூர் – 635109. **இணைந்து கடன் பெற்றவர் : திரு.S.V.ஸ்ரீநிவாசலு, த/பெ.வெங்கடசுவாமி,** 2/127, H.செட்டிப்பள்ளி கிராமம், J.கருப்பள்ளி அஞ்சல், ஒசபுரம் தரஃப், தேன்கனிக்கோட்டை தாலுக்கா, கிருஷ்ணகிரி மாவட்டம் - 635109. **கடன் நிலுவைத் தொகை : 20.08.2026 வரையில் ரூ.4,32,22,688.00 மற்றும் வட்டி, ஏனைய கட்டணங்கள் சேர்த்து. கேட்பு அறிவிப்பு தேதி : 17.02.2026. அடையாள சுவாதீனம் எடுக்கப்பட்ட தேதி : 16.07.2026. சொத்து விபரம் :** 1308 சதுரடி விஸ்தீரணம் அளவுள்ள குடியிருப்பு கட்டிட சொத்தானது பின்வருமாறு அமைந்துள்ளது. சர்வே எண்.712 மற்றும் புதிய சப்டிவிஷன் எண்.712/4H பாகம், பிளாட் எண்.2 (கிழக்கு பாகம்), ஜெயலட்சுமி நிலையம், 6வது கிராஸ், அம்மன் நகர், தேன்கனிக்கோட்டை சாலை, மதிகிரி கிராமம் மற்றும் பஞ்சாயத்து, ஒசூர் தாலுக்கா, கிருஷ்ணகிரி மாவட்டம் – 635109. சொத்தின் எல்லைகள் : வடக்கில் S.F.No.712 பாகம், தெற்கில் 30 அடி லேஅவுட் சாலை, கிழக்கில் வர்த்தக மனையிடம், மேற்கில் திருமதி.லட்சுமிதேவி அவர்களின் பிளாட் எண்.2 (பாகம்). **திரு.S.S.லட்சுமிபதி, த/பெ.திரு.S.V.ஸ்ரீநிவாசலு அவர்களுக்கு சொந்தமான சொத்து. காப்பு விலை : ரூ.1,39,00,000.00. முன்வைப்புத் தொகை : ரூ.13,90,000/-. ஏலம் உயர்த்திக்கோரும் தொகை : ரூ.1,00,000/-. . ஏலம் நடைபெறும் தேதி : 24.09.2026. ஏலம் நடைபெறும் நேரம் : காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை 10 நிமிட கால நீட்டிப்புடன் .** சொத்தினை பார்வையிடும் தேதி : **அனைத்து வேலை நாட்களிலும் 19.09.2026 முதல் 23.09.2026 தேதி வரையில் காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரையில் கிளை மேலாளரின் முன் அனுமதி பெற்று பார்வையிடலாம். முன்வைப்புத் தொகை செலுத்த கடைசி தேதி : 24.09.2026 மதியம் 1.00 மணி வரை. சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா, ஒசூர் கிளை, அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி / முதன்மை மேலாளர் : Mob No : 8489903009**

**நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகள் : 1.** ஏல விற்பனை ஆன்லைன் மின்னணு ஏலம் / ஏலம் கோருதல் என்ற முறையில் **https://baanknet.com** என்ற இணையதளத்தின் வாயிலாக மேற்குறிப்பிட்ட தேதி மற்றும் நேரத்தில் (ஏலம் முடிவுக்கு வரும் வரையில் 10 நிமிடம் கால நீட்டிப்புடன்) நடைபெறும். **2.** ஏல விண்ணப்பங்களை ஆன்லைன் முறையில் **24.09.2026,** மதியம் **1.00** மணி அளவிலோ அல்லது அதற்கு முன்பாகவோ சமர்ப்பிக்க வேண்டும். **3.**மின்னணு ஏல விற்பனையானது **"எப்படி எங்கு உள்ளனவோ அதே நிலையில்"** என்ற அடிப்படையில் நடைபெறும். **4.** விருப்பமுள்ள ஏலதாரர்கள் மின்னணு ஏல நடவடிக்கைகளில் கலந்து கொள்ளுதல் மற்றும் ஏல விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் ஆகியவற்றுக்கு முன்பாக **https://baanknet.com** என்ற இணையதளத்திற்கு சென்று முழு விபரங்களுடன் கூடிய நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை அறிந்துகொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். **5.** வெற்றிபெற்ற ஏலதாரர் / சொத்தினை வாங்குபவர், வருமான வரிச் சட்டம் 1961-ன் உட்பிரிவு 194 IAன் பிரகாரம் ரூ.50.00 லட்சம் மற்றும் அதற்கு மேலான மதிப்பினை உடைய அசையாச் சொத்துக்களின் விற்பனை நடைமுறைகளில் 1% TDS தொகையினை செலுத்த வேண்டும். இத்தொகையினை படிவம் 26QB ல் சலான் (Challan) பூர்த்தி செய்து செலுத்தியதன் பின்னர் அதற்கான TDS சான்றிதழின் அசல் இரசீதினை வங்கியில் சமர்ப்பிக்க வேண்டும். **6.** மேலும் சொத்து தொடர்பான விபரங்களை அறிய **சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா, ஒசூர், அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி / முதன்மை மேலாளர் : Mob No : 8489903009, முதன்மை மேலாளர் (RO) : Mob No : 8489903057, சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா, மண்டல அலுவலகம், கோயம்புத்தூர், மின்னஞ்சல் முகவரி :recvcoimro@centralbank.co.in,** அவர்களை அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும். ஏலதாரர் மேற்கண்ட இணையதளத்தில் பதிவு செய்து கொண்ட பின்னர், விருப்பமுள்ள ஏலதாரர் / சொத்தினை வாங்குபவர் பின்வரும் ஆவணங்களை ஏல விண்ணப்பத்தினை சமர்ப்பிக்கும் கடைசி தேதிக்கு முன்பாக இணைய தளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும். 1) NEFT/RTGS சலான் ஆகியவற்றின் நகல், 2) PAN கார்டு நகல், 3) அடையாளச் சான்று (KYC) சுய சான்றளிக்கப்பட்ட வாக்காளர் அடையாள அட்டை / ஓட்டுனர் உரிமம் / பாஸ்போர்ட், 4) முகவரிச் சான்று. மேற்கண்ட ஆவணங்களை பதிவேற்றம் செய்யாவிடில் ஏல விண்ணப்பம் நிராகரிக்கப்படும் என்பதை அறியவும்.

**தேதி : 20.08.2026**
**இடம் : ஒசூர்**

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
**சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா**